[1981 ஏப்ரல் 28

(முற்பகல் 10-10)

குறுகிய கால வினா எண் 13—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் (வேலைக்கு உணவு திட்டம்) அமைப்பையே மாற்றி மத்திய அரசு அண்மையில் உத்தர விட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனால் திட்டத்தின் பணி பாதிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகின்ற பணமும், அரிசியும் பயன்படுத்தப்பட்ட பிறகு மத்திய அரசுக்கு 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்', அதாவது அவைகளைப் பயன்படுத்தியதற்கான சர்ட்டிபிகேட் என்ற ஒன்றை அனுப்ப வேண்டும். இந்த அரசிலிருந்து இதுவரையில் இந்த வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இவ்வளவு அரிசியைப் பயன்படுத்தியிருக்கிறோம், இவ்வளவு ரூபாய்களைச் செலவழித்திருக்கிறோம் என்ற 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்' அனுப்பாத காரணத்தால்தான் மத்திய அரசாங்கம் நமக்கு நிதியையோ அல்லது அரிசியோ ஒதுக்கவில்லை என்ற கருத்து நிலவுகிறது. மேற்கு வங்காளத்திலே யிருந்துகூட அப்படிப்பட்ட 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்டை' அனுப்பியிருக்கிறார்கள். டெல்லியில் பாராளுமன்றத்திலேயே சொல்லியிருக்கிறார்கள் எனவே, இங்கேயிருந்து 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்டை' அனுப்பாத காரணத்தால் மத்திய அரசாங்கம் நமக்கு முறையாக நிதியோ அல்லது அரிசியையோ கொடுக்கத் தயங்குகிறதா? ஆமெனில், அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்களுடைய தனிப்பட்ட கருத்தாக இதைச் சொல்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக இந்தக் கருத்தை வெளியிட்டிருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். ஆகவே, 'யுடிலைசேஷன் சர்ட்டிபிகேட்' கொடுக்காத

1981 ஏப்ரல் 28]

காரணத்தால் இந்த அரிசி கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு புதிதானது, வேண்டுமென்றே கூட சொல்வதாகவும் இருக்கும். ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகளை இதுவரையில் மைய அரசு நமக்குத் தெரிவிக்க வில்லை. மாநில அரசைப் பொறுத்தவரையில் குறிப்பாக வேலைக்கு உணவுத் திட்டம், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் இந்த தமிழக அரசுதான் அதிகமான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று அதன் மூலம் இந்தத் திட்டத்தை மிக விரைவாகவும், வேகமாகவும், நல்ல முறை யிலேயும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் வேலைக்கு உணவு வழங்கும் முறையில் இரண்டு கிலோ அரிசி, ஒரு கிலோ அரிசிக்குண்டான பணம் ஆகியவை கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுவதால் தற்பொழுது அந்த வேலைக்கு ஆட்கள் வருவதில்லை. எனவே அரிசிக்குப் பதிலாக மொத்தமாக பணம் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, கடந்த ஆண்டு முடிந்த வரையிலும் இந்தத் திட்டத்திற்கு அரிசியாக அவர்கள் ஒதுக்கிக் கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டு அரிசி உபரியாக இல்லாத காரணத்தால் ஒதுக்க முடியவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப் பாக கொடுப்பதை, 'கைன்ட்' ஆக, அரிசியாக வேண்டுமானாலும் கொடுக்க லாம், பணமாக வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆகவே, அந்தந்த நிலைமை களுக்கு ஏற்ற வகையில் அந்தந்த அரசுகள் செயல்படுத்த வேண்டுமென்றுதான் மைய அரசு விதிமுறைகளைக் கொடுத்துள்ளது. அந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: பேரவைத் தலைவரவர்களே, வேலைக்கு உணவுத் திட்டம் என்ற வகையில் தமிழகத்திலே கொடுக்கப்பட்ட அரிசி காண்ட்ராக்ட் முறையில் கொடுக்கப்பட்ட காரணத்தால், காண்ட்ராக்டர் களுக்கு அந்தத் தேதிகளில் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அவர்களுக்குரிய ஒதுக்கீட்டைக் கொடுக்க முடியாத காரணத்தால் அரிசி வழங்கப்படவில்லை. எனவே பணமாகக் கொடுத்துவிட்டுப் பிறகு நிதி கிடைக்கின்ற காரணத்தால் அரிசியை வாங்கி விற்று விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறதே, அது அரசுக்குத் தெரியுமா? அதை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் காண்ட்ராக்டர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்றுதான் ஏற்கனவே அரசின் மூலமாக விதிமுறைகளை அந்தந்த ஆணையாளர்களுக்கு, அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போன்று அப்படிப்பட்டவிதத்தில் காண்ட்ராக்ட் முறையில் வேலைகள் செய்யப்பட்டிருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எழுமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருநெல்வேலி மாவட்டம், கழுகுமலையில் நடைபெற்ற கலவரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'திருநெல்வேலி மாவட்டம், கழுகுமலையில் 24—4—1981 அன்று நடந்த கலவரம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்' என்று தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. கு. ரமணி, திரு. சோ. அழகர்சாமி, திரு. ரா. கிருஷ்ணன், திரு. ரா. உமாநாத், திரு. என். பழனிவேல், திரு. இரா. கருப்பையா, திரு. செ. சிவசாமி, திரு. என். எஸ். வீ. சித்தன் ஆகியோரிடமிருந்து முன்னறிவிப்புக்கள் வந்துள்ளன. இது எப்படி அவசர முக்கியம் என்பது குறித்து மிகச் சுருக்கமாக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திரு. சோ. அழகர்சாமி அவர்கள்.

* திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் கழுகுமலையில் இரு வகுப்பாரிடையே ஏற்பட்ட ஒரு சச்சரவின் காரணமாக 24—4—1981 இரவு 11 மணிக்கு பஜாரிலே கடைகளுக்கு ஒரு கும்பல் தீ வைத்து, பல இலட்சக்கணக்கான பெருமான பொருள்கள் சேதம் அடைந்து, மிகப்பெரிய நஷ்டத்திற்கு அந்தப் பகுதி ஆளாக்கப்பட்டிருக்கிறது. அந்த மனக்கசப்பு ஒரே நாளிலே ஏற்பட்டு, உடனே நடந்திருக்க முடியாது.